## உங்கள் பொறுப்புகள்

எங்களுடைய நோயாளியாக இருப்பதால், உங்களுடைய நலனைப் பாதுகாப்பது எங்கள் பொறுப்பாகும். எனினும், குணமாக்கும் சிகிச்சையில் நீங்கள் உங்களுடைய பங்கையாற்ற வேண்டும். உங்களுடைய தேவைகளைப் பூர்த்திச் செய்வதோடு, உங்களுடைய குடும்பத்தின் ஆதங்கங்களைத் தீர்க்க நாங்கள் உயர்தர சேவையை வழங்க விரும்புகிறோம்.

நீங்களும் உங்கள் குடும்பமும் இவற்றைச் செய்ய வேண்டுகிறோம்:

1. உங்களுடைய மருத்துவ நலன், நோய்கள் (பயன்படுத்தும் மருந்துகளையும் இருக்கும் மருந்து ஒவ்வாமையும் உள்ளடக்கவும்), வருமான நிலை ஆகியவற்றைப் பற்றி முழு தகவல் கொடுக்கவும்.
2. மருத்துவர்கள் கொடுக்கும் ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் ஒழுங்காகக் கடைபிடிக்கவும்.
3. மருத்துவ ஆலோசனைகளைக் கடைபிடிக்க தடைகளைச் சந்தித்தால் எங்களைத் தொடர்புகொள்ளவும்.
4. உங்கள் நோய்களின் நிலையில் மாற்றம் ஏற்பட்டால் எங்களைத் தொடர்புகொள்ளவும்.
5. உங்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ சேவைகளின் கட்டணங்களைத் தாமதமின்றி கட்டவும்.
6. மருத்துவ சேவைகளைப் பற்றி முடிவு எடுக்காத நிலை நேரிட்டால், உங்களுடைய ஆசைகளை முன்வைக்கும் நபரைத் தேர்ந்தெடுக்கவும்.
7. அனைத்து மருத்துவ ஊழியர்கள், நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களை மரியாதையுடன் நடத்தவும்.
8. நோயாளிகளைச் சந்தித்தல் போன்ற மருத்துவமனை விதிமுறைகளைப் பின்பற்றவும்.
9. உங்களுக்கு ஏதேனும் புரியாவிட்டால், எங்களிடம் கேளுங்கள். உங்களுடைய சந்தேகங்களைத் தீர்ப்பதினால், மருத்துவ சிகிச்சைக்குப் பின் உங்களை நீங்கள் இன்னும் சிறப்பாகப் பார்த்துக்கொள்ளலாம்.
10. உங்களுடைய மருத்துவ சந்திப்புகளுக்கு வர முடியாவிட்டால், எங்களிடம் முன்கூட்டியே சொல்லவும்.

## கருத்துகள்

நோயாளிகள் பயனடையும் நமது சேவைகளை மேம்படுத்த உங்களுடைய கருத்துகள் பெரிதும் உதவும். உங்களுக்கு ஏதேனும் பரிந்துரை இருந்தாலோ உங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்பினாலோ, எங்களுடைய சேவை தர அதிகாரியை 6704 2379 / 6704 2059 அழைக்கவும் அல்லது nhcs@nhcs.com.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

எங்கள் மீது நம்பிக்கை வைத்ததற்கு நன்றி.

**முன் மருத்துவ உத்தரவு ஆவணம்**[1] (Advance Medical Directive, AMD) சட்டப்படி செல்லக்கூடிய ஆவணமாகும். நீங்கள் முழுமையாக நோய்வாய்ப்பட்டு நினைவிழக்கும் நிலை ஏற்பட்டு, உங்களுடைய உயிரை நீடிக்கும் சிகிச்சை வேண்டாம் என்றால், இந்த ஆவணத்தில் கையொப்பமிட்டு உங்களுடைய மருத்துவரிடம் கூறலாம்.

**தேசிய மின்னணு உடல்நல பதிவு**[2] (National Electronic Health Record, NEHR) நோயாளிகளின் மருத்துவ விவரங்களைச் சேகரிக்கும் ஒரு தளமாகும். தேசியளவில் மருத்துவர்கள் உங்களுடைய மருத்துவ விவரங்களை இந்தத் தளத்தில் பார்க்கலாம். உங்களுடைய மருத்துவர் உங்களுக்கு சிகிச்சை வழங்கும்போது, இந்தத் தளம் பெரிதில் உதவும்.

தேசிய மின்னணு உடல்நல பதிவு (NEHR) இந்தத் தகவல்களை வழங்குகிறது:

- முன்னாள் மருத்துவ பதிவுகளும் சந்திப்புகளும்
- நோயாளி விடுவிப்பு சுருக்கங்கள்
- ஆய்வு, எக்ஸ் கதிர் (X-Ray), மற்றும் பிற கதிர்ப்பட முடிவுகள்
- மருந்து பட்டியல்
- மருந்து ஒவ்வாமை மற்றும் தடுப்பு மருந்துகள்

முன் மருத்துவ உத்தரவு ஆவணத்தைப் (AMD) பற்றியும் தேசிய மின்னணு உடல்நல பதிவைப் (NEHR) பற்றியும் மேலும் தெரிந்துகொள்ள, தயவுசெய்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தை *www.moh.gov.sg* நாடவும்.


**NATIONAL HEART CENTRE SINGAPORE**
5 Hospital Drive
Singapore 169609
Tel: (65) 6704 8000
Fax: (65) 6844 9030
Email: nhcs@nhcs.com.sg
Website: www.nhcs.com.sg
Reg No 199801148C


Printed June 2017

PATIENTS. AT THE HEART OF ALL WE DO.®

# நோயாளிகளுக்கு நமது கடமை



National Heart Centre Singapore
SingHealth

## நோயாளிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தின் நலனைப் பாதுகாப்பது

சிங்கப்பூர்த் தேசிய இருதய நிலையம் (NHCS) அதனின் நோயாளிகளுக்கு ஆக சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதில் பொறுப்பு கொண்டுள்ளது. மனிதநேயம், மரியாதை, உண்மை ஆகிய விழுமியங்களைச் சார்ந்த உயர்தர மருத்துவ சேவைகளை உங்களுக்கும் உங்கள் குடுமபத்ததிற்கும் வழங்க விழைகிறோம். உங்களுடைய வயது, இனம், மதம், சமூக வருமான நிலை ஆகியவற்றை பொருட்படுத்தாமல், உங்களுடைய நோயைக் குணப்படுத்தி உங்கள் நலனைப் பாதுகாக்க நமது மருத்துவர்கள் உழைக்கின்றனர்.

### அக்கறையும் மரியாதையும்

- சிங்கப்பூர்த் தேசிய இருதய நிலையத்தில் (NHCS) நீங்கள் மனிதநேயம் நிறைந்த பாதுகாப்பான சூழலில் மரியாதையுடன் நடத்தப்படுவீர். உங்களுடைய மருத்துவ சிகிச்சைக்கு மட்டும் தேவைப்பட்டாலே ஒழிய, எந்தவொரு கட்டுப்பாடு இன்றி பாதுகாப்பாக இருப்பீர்கள். ஊனமுற்றவர்கள், முதியோர்கள், மற்றும் சிறப்பு தேவை கொண்டவர்களுக்குச் சிறப்பு பாதுகாப்பு வழங்கப்படும்.
- உங்களுடைய தனிப்பட்ட விழுமியங்கள், ஆன்மீக கலாசார நம்பிக்கைகள், மற்றும் தனிமை தேவைகளை நாம் மதிக்கிறோம். ஒற்றுமையைச் சீர்குலைக்காமல் பிரச்சினைகளை உண்டாக்காமல் இருந்தால், நீங்கள் உங்களுடைய மதம், கலாசார நம்பிக்கைகளை வெளிப்படுத்தலாம். உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து உங்கள் தாதியிடம் கூறுங்கள். அவர் ஒரு மத ஆலோசகரை அழைத்து உங்களுக்கு உதவி புரிவார்.
- கடுமையான நோய்க்கான மருத்துவ சிகிச்சையைப் பற்றி முடிவுகள் எடுப்பது உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் கடினமாக இருக்கும் என்று எங்களுக்குப் புரிகிறது. தேவைப்பட்டால், உயிரியல்நெறியியல் குழுவை நாடி, உங்களுடைய மருத்துவ சிகிச்சையைச் சார்ந்த விஷயங்களை உங்களுடனும் உங்கள் குடும்பத்துடனும் அலசி ஆராய கோரிக்கை விடுக்கலாம். முன் மருத்துவ உத்தரவு ஆவணம்[1] (AMD) ஒன்றை நீங்கள் ஏற்கனவே தயார்ப்படுத்தியிருந்தால், அதில் இருப்பதை நாம் பின்பற்றுவோம்.
- உங்கள் நோயைப் பற்றியும் தேவைப்படும் சிகிச்சை பற்றியும் சிங்கப்பூர்த் தேசிய இருதய நிலையத்தில் (NHCS) பணிபுரியும் மற்ற மருத்துவர்களிடமிருந்து அல்லது இன்னொரு மருத்துவ அமைப்பில் பணிபுரியும் மருத்துவர்களிடமிருந்து நீங்கள் கருத்துகள் கேட்க விரும்பலாம். இன்னொரு மருத்துவரிடமிருந்து கருத்துப் பெற முடிவு எடுத்தால், தயவுசெய்து உங்களுடைய மருத்துவ குழுவிடம் பேசுங்கள்.

### நம்பகத்தன்மையும் அந்தரங்கமும்

- சட்டமும் தொழில் நெறிகளும், தேசிய மின்னனு உடல்நல பதிவில்[2] (NEHR) இருக்கும் தகவல்களை உள்ளிட்டு, உங்களுடைய அனைத்து மருத்துவ விவரங்களையும் மருத்துவ சிகிச்சைகளையும் பற்றி ரகசியமாக வைத்திருக்க கட்டுப்படுத்துகின்றன.
- உங்களுக்கு மருத்துவ சேவை வழங்குபவர்களிடம் மட்டும் தான் இந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும்.
- மருத்துவமனை இயங்குமுறைகளுக்காக இந்தத் தகவல்கள் மற்ற மருத்துவ ஊழியர்களுடன் பகிரந்துகொள்ளப்படலாம்; உதாரணத்திற்கு, நமது மருத்துவ ஊழியர்கள் உங்களுக்கு வழங்கும் சேவைகளைக் கண்காணித்தல்.
- சிங்கப்பூர்த் தேசிய இருதய நிலையம் (NHCS) சிங்கப்பூரில் தொடர்பீட்டு நிலையம் மட்டுமில்லாமல் விரும்பப்படுகின்ற பயிற்சி நிலையமும் ஆகும். மருத்துவ ஆராய்ச்சிக்கும் ஆய்வுகளுக்கும் பெயர் போனது. ஆகையால், சட்டப்படியாகவோ அல்லது சிங்கப்பூர்த் தேசிய இருதய நிலையத்தாலோ (NHCS) அனுமதிக்கப்பட்ட மருத்துவ ஆராய்ச்சிகளுக்கும் பயிற்சிகளுக்கும் நோயாளிகளின் மருத்துவ விவரங்களை உபயோகிக்க நேரிடலாம். ஆனால், உங்களுடைய மருத்துவ விவரங்களைப் பயன்படுத்துபவர்கள் அவ்விவரங்க்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள முடியாது.
- சில சூழ்நிலைகளில், தொற்றுநோய்கள் போன்ற நோய்களைப் பற்றி அரசாங்கத்திடம் சட்டப்படியாகத் தெரிவிக்க நாம் சில மருத்துவ விவரங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கும்.
- மேலே கூறியதை தவிர, உங்களுடைய மருத்துவ விவரங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டியிருந்தால், உங்களிடம் அனுமதி கேட்ட பின்னே செய்வோம்.

### சிகிச்சையைப் பற்றின விளக்கமும் தகவலும்

சிங்கப்பூர்த் தேசிய இருதய நிலையம் (NHCS) மருத்துவர்கள், தாதியர்கள், மற்றும் பல மருத்துவ ஊழியர்களுக்குப் பயிற்சி வழங்குகிறது. உங்கள் மருத்துவரின் மேற்பார்வையில் மருத்துவ, தாதியர் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உங்களுடைய மருத்துவ சிகிச்சைகளில் கலந்துகொள்ளலாம்.

உங்கள் நோயைப் பற்றின தகவல்களை உங்களால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடிகின்ற மொழியில் தெரிந்துகொள்ள உங்களுக்கு உரிமை உண்டு. இந்தத் தகவல் இவற்றை உள்ளடக்கும் (அவசரக் காலத்தைத் தவிர):

- சிகிச்சை முறைகள் (அறுவை சிகிச்சை செயல்முறையை உள்ளிட்டு)
- எதிர்பார்க்கப்படுகின்ற முடிவு
- சிகிச்சையால் ஏற்படக்கூடிய சிக்கல்கள்
- சிகிச்சையின்மையால் ஏற்படக்கூடிய சிக்கல்களும் விளைவுகளும்
- மதிப்பிட்ட மருத்துவ கட்டணம்
- மருத்துவமனையிலிருந்து விடுவித்தப் பிறகு, தேவைப்படும் மருத்துவ சேவைகள்
- உங்கள் சிகிச்சையைப் புரிந்த மருத்துவ ஊழியர்களின் பெயர்கள்

பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சைக்கு அல்லது அறுவை சிகிச்சைக்கு அனுமதி அளிக்கவா இல்லையா என்று இந்தத் தகவல்கள் முடிவெடுக்க உதவும்.

நீங்கள் மருத்துவ சிகிச்சையைப் பெற விரும்பவில்லை என்றாலோ மருத்துவரின் அறிவுரைக்கு எதிராக மருத்துவமனையிலிருந்து கிளம்ப விரும்பினாலோ, மருத்துவ அறிவுரைக்கு எதிராக விடுவிப்பு என்ற ஆவணத்தில் கையொப்பமிட்ட பிறகே செல்ல முடியும். உங்கள் முடிவால் ஏற்படும் விளைவுகளுக்கு நீங்களே முழு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### ஆராய்ச்சி

சில நோயாளிகள் மருத்துவ ஆராய்ச்சிகளில் கலந்துகொள்ள அழைக்கப்படுவார்கள். மனிதர்களை வைத்து மருத்துவ ஆராய்ச்சி செய்வதற்கு முன், நாம் நோயாளிகளிடமிருந்து ஓர் ஒப்பந்தம் மூலமாக அனுமதி பெற வேண்டும். நீங்கள் ஒப்பந்தம் கொடுத்தப் பிறகும், எப்போது வேண்டுமானாலும் ஆராய்ச்சியிலிருந்து விடுவிப்பு பெறலாம். இதில் கலந்துகொள்ளாவிட்டாலும், உங்களுடைய மருத்துவ சேவைகளில் எந்தவொரு குறைபாடு ஏற்படாது.

### உடல் உறுப்பு தானம்

இருதயம், கல்லீரல், சிறுநீரகம் இயலாமை போன்ற உறுப்பு இயலாமையால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உடல் உறுப்பு தானம் மூலமாக தான் புது வாழ்வு அளிக்க முடியும். மனித உறுப்பு மாற்று சிகிச்சை சட்டம் (HOTA) மருத்துவமனையில் இயற்கையாக, இயற்கைக்கு மாறாக இறந்தவர்களிடமிருந்து அவர்களது உறுப்புகளை (சிறுநீரகம், கல்லீரல், இருதயம், கண்) மாற்று சிகிச்சைக்காக அகற்ற அனுமதிக்கிறது. தங்கள் விருப்பமின்மையைக் கூறியவர்களை ஒழிய, முழு மூலவளர்ச்சி கொண்ட 21 வயதுக்கு மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கும் நிரந்தவாசிகளுக்கும் இந்தச் சட்டம் செல்லும். உயிரோடு இருப்பவர்கள் தங்கள் உறுப்பை தானம் செய்வதை இந்தச் சட்டம் முறைப்படுத்துகிறது.

பல நோயாளிகள் ஓர் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ மனித உறுப்பு மாற்று சிகிச்சை சட்டம் (HOTA) வழிவகுக்குகிறது. இந்தச் சட்டத்தில் (HOTA) இருக்கும் அனைவருக்கும் மற்றவர்களுக்கு உதவி புரிய வாய்ப்பு கிடைப்பதோடு, அவர்களுக்கு உறுப்பு மாற்று சிகிச்சை தேவைப்படும்போது வரிசை பட்டியலில் கூடுதல் முக்கியத்துவம் பெறுவார்கள். இறப்பிற்குப் பின், எந்தவொரு உறுப்பும் தானம் செய்ய விரும்பாதவர்கள் இந்தச் மனித உறுப்பு மாற்று சிகிச்சை சட்டத்திலிருந்து (HOTA) விலகிக்கொள்ளலாம். உங்கள் ஆசை மதிக்கப்படும். சட்டத்திலிருந்து விலகிக்கொள்ளும் ஆவணம் மருத்துவமனையிலும் பலநோய் மருத்துவமனைகளிலும் (polyclinic) கிடைக்கும். இந்த ஆவணம் **தேசிய உறுப்பு மாற்று பிரிவிலும்** கிடைக்கும் - புளோக் 3 முதல் மாடி, சிங்கப்பூர் பொது மருத்துவமனை, சிங்கப்பூர் 169608, எண்: 6321 4390.

மேல் விவரங்களுக்கு, தயவுசெய்து மனித உறுப்பு மாற்று சிகிச்சை சட்ட (HOTA) எண்ணிற்கு அழைக்கவும்: 1800-2254-122 அல்லது சுகாதார அமைச்சின் இணையத்தளத்தை *www.moh.gov.sg* நாடவும்.